ria
Money Transfer
உலகின் எப்பாகத்திற்கும் பணத்தை அனுப்ப உடன் நாடுங்கள்
Send and receive money worldwide

e-பத்திரிகை
uthayam news
உதயம் செய்திகள்
தமிழர்களின் புது யுகம்
உதயம் 04 | ஒளி 01 | 08 அகஸ்ட் 2024 | www.uthayamnews.com

# ஜனாதிபதி தேர்தல்: தமிழ் பொது வேட்பாளராக அரியநேந்திரன்






தமிழ் பொது வேட்பாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேந்திரன், அறிவிக்கப்பட்டுள்ளார்.

சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைவுடன் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏழு பிரதிநிதிகளும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஏழினது பிரதிநிதிகளும் கூட்டிணைந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தனர்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் வியாழக்கிழமை கூடி தமிழ் பொது வேட்பாளரை அறிவித்துள்ளனர்.

அதேவேளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் ஆகியோரது பெயர்களும் இறுதிப் பட்டியலில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொது வேட்பாளர் சுயேட்சையாகவே களமிறக்கப்பட்டுள்ளார்

தமிழ் பொது வேட்பாளர் சுயேட்சையாகவே களமிறக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய குழு உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் தலைவருமான பா.அரியநேந்திரன், அறிவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

எமது பொது வேட்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதனால் சுயேட்சையாக போட்டியிட முடியும். அதனால் அவர் சுயேட்சையாகவே போட்டியிடுகிறார்.

தமிழ் பொது வேட்பாளராக போட்டியிட கூடிய 75 தொடக்கம் 80 பேர் வரையிலானவர்களின் பெயர்களை பரிசீலித்தே , பா.அரியநேந்திரனை தெரிவு செய்துள்ளோம்.

எம்முடன் இணைந்து பயணிக்க விரும்புவோர் பயணிக்க முடியும். இன்னமும் ஓரிரு நாட்களில் வேட்பாளருக்கான கட்டுப்பணத்தினை செலுத்தவுள்ளோம் என தெரிவித்தார்.





# தமிழ் தேசியத்தின் குறியீடாக நான் இருப்பேன்

# தமிழ் தேசியத்திற்காக மக்கள் வாக்களிக்க வேண்டும்!

## பா.அரியநேத்திரன் தெரிவிப்பு

தமிழ்தேசியத்தின் குறியீடாக நான் இருப்பேன் தமிழ்தேசியத்திற்காக மக்கள் வாக்களிக்க வேண்டும் என தமிழ் பொதுவேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழ்தேசியபொதுக்கட்டமைப்பின் பெதுவேட்பாளரை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் வியாழக்கிழமை (08) இடம்பெற்ற போது அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியத்தின் குறியீடாக மாத்திரமே நான் இருப்பேன் இலங்கை சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக வருவதற்காக அல்ல. தமிழ்த்தேசிய மண்ணில் இனப்படுகொலை செய்யப்பட்ட இனமாக நாங்கள் இருக்கின்றோம் எங்களுக்கான உரிமை கிடைக்கவேண்டும் என்பதற்காக சர்வதேசத்திற்கும் தென்னிலங்கைக்கும் வலியுறுத்துகின்ற அடையாளமாக இந்தத் தேர்தலில் பொது வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். எனது பணி செப்டம்பர் 22 ஆம் திகதி மட்டுமே இருக்கும் அதற்கு பிற்பாடான பணிகளை தமிழ் பொதுக்கட்டமைபே எடுக்கும்.

தந்தை செல்வா காலம் தலைவர் பிரபாகரன் காலம் அதற்குப் பின்னர் சம்பந்தன் தலைமையின் கீழ் வழிநடத்தப்பட்டோம். இதில் பலர் இருந்திருந்தாலும் தந்தை செல்வாவின் போராட்டம் அகிம்சை பீதியாக பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருந்தாலும் பல ஏமாற்றங்களை கண்டிருந்தது பின்னர் ஆயுதப்போராட்டம் அது மௌனிக்கப்பட்ட பின்னர் மீண்டும் ஜனநாயக பீதியான போராட்டங்கள் நடைபெற்று வந்தபோதும் ஏமாற்றங்களே எமக்கு மிஞ்சியது.

சர்வதேச ரீதியாக நாங்கள் பேச்சுவார்த்தைக்குச் செல்லுகின்றபோது சர்வதேசம் ஒரு குரலில் வரவேண்டும் என்பதைத்தான் நமக்கு கூறியது இவ்வாறாக அனைத்து விடையங்களை நாங்கள் சீர்தூக்கிப் பார்க்கும் போது ஒரு குரலில் ஒருமித்த கருத்துக்களை முன்கொண்டு செல்வதற்காக நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக அடையாளப்படுத்தப்பட்டு அதற்கான ஆதரவை வாக்குகளாக செலுத்துகின்றபோது தமிழ் மக்களின் இனப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாது உள்ளது அவை தீர்க்கப்படவேண்டும் என்பதை வெளிக்காட்டுகின்ற முயற்சியே இந்த பொது வேட்பாளர் முயற்சியாகும்.

பொதுக் கட்டமைப்பு சார்பில் பலரையும் ஆராய்ந்த பின்னர் இறுதியாக சட்டத்தரணி தவராசாவும் எனது பெயரையும் இறுதித் தெரிவில் இருந்தது. நாங்கள் இருவரும் நண்பர்களாகவே இருக்கின்றோம். எவ்வாறாயினும் நானே அவரோ எவ்விதமான சர்ச்சைகளும் இல்லாமல் என்னை தெரிவு செய்தார்கள். இதனால் தமிழ்தேசியத்தின் அடையாளமாக நான் இருப்பேன்.

இவ்வாறான சூழலில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் எத்தகையவர்கள் போட்டடியிடுகின்றார்கள் என்பது அனைவரும் அறிந்த விடையம் மிக முக்கியமாக போட்டியிடுகின்ற ஜனாதிபதி வேட்பாளராக இருக்கின்றவர்கள் விடுதலைப்புலிகளை நான் தான் பிரித்தேன், கட்சிகளை பிரித்தேன்,என்னை மாற்றமாட்டேன் என்று போட்டிபோட்டு செல்லும் நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் மக்களை பிரித்தாளுகின்றவர்களுக்கு வாக்குகளை வழங்கப்போகின்றோமா? வடக்கில் ஒன்று தெற்கில் ஒன்று கதைப்பவர்களுக்கு வாக்குகளை வழங்கப்போகின்றோமா? வடக்கு கிழக்கை பிரித்தவர்களுக்க வாக்குகளை வழங்கப்போகின்றோமா? என்பதை தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். தமிழ்த்தேசிய இனத்தின் விடிவுக்காக பல இலட்சம் மக்களையும் போராளிகளையும் இழந்துள்ள நாம் உரிமையற்றவர்களாக இருக்கும் நிலையில் பல ஜனாதிபதிகளைக் கண்டு ஏமாற்றம் அடைந்துள்ள நிலையில் இன்னும் பேரம் பேசத்தான் போகின்றோமா? இவை தொடர்பில் சிந்திக்கவேண்டும். இவற்றுக்காகத்தான் பொது வேட்பாளராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளேன். எனவே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் எங்கள் விடிவுக்காக வாக்களிக்கவேண்டும் என்றார்.

ria Money Transfer
உலகின் எப்பாகத்திற்கும்
பணத்தை அனுப்ப
உடன் நாடுங்கள்
Send and receive money worldwide




# சஜித்தின் புதிய கூட்டணி:
# 8 கட்சிகள் இணைவு – தனிப்பட்ட ரீதியில் பல எம்.பிகள் ஆதரவு

எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கூட்டணியான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 08 கட்சிகள் இணைந்துள்ளன.

இந்தக் கட்சிகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு வியாழக்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. பிளவுபடாத ஐக்கிய நாட்டுக்குள் சகலருக்கும் சமவுரிமை கிடைக்க வேண்டுமென்ற கோட்பாட்டின் பிரகாரம் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திர மக்கள் சபை, அர்ஜுன ரணதுங்கவின் மக்களின் குரல் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தயாசிறி ஜயசேகரவின் தரப்பு உள்ளிட்ட 08 கட்சிகள் கூட்டணியின் பிரதான பங்காளிகளாக உள்ளன.

அதேபோன்று நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் எம்.பிகளும், பல்வேறு சிவில் அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் இணைந்துள்ளன.



# அனுர தரப்பிலிருந்து சஜித்துக்கு கொலை மிரட்டல்

ஜேவிபியின் அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் ஒருவர் மூலம் காலி ஹாலிவல பிரதேசத்தில் வசிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக காலி மாவட்ட தேர்தல் முறைப்பாடுகளை வழங்கும் நிலையத்துக்கு முறைப்பாடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு கடந்த 6ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரான முறைப்பாடு வழங்கியவர் காலி ஹாலிவலயில் காணப்படும் தனது வீட்டுக்காணியில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவும் நன்கொடையாக தேர்தல் காரியாலயம் ஒன்றை திறக்க எதிர்பார்த்துள்ளார்.

அதன்போது காலி பட்டதுவ பிரதேசத்தில் வசிக்கும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் செயற்பாட்டாளர் ஒருவர் தனது மனைவியுடன் வந்து ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலம் ஒன்றை திறந்தால் கொலை செய்வதாக மிரட்டல் விடுத்தாக முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் காலி பொலிஸின் தேர்தல் பிரிவுக்கு இந்த முறைப்பாட்டை முன்னிலைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை நாடாளுமன்றத்தை ஜேவிபி கைப்பற்ற திட்டமிட்டுள்ளதாக அதன் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த பகிரங்கமாக தெரிவித்திருப்பதால், அவரை உடனடியாக குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என கொழும்பு மாவட்ட உறுப்பினர் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஆண்டு நிதி நிலை அறிக்கை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# அனுரவிடம் நாட்டை கையளிக்க மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்

## 48 நாட்களில் அந்த சந்தர்ப்பம்

அதல பாதாளத்தில் இருந்து நாட்டைக் மீட்டெடுப்பதற்கான சரியான தொலைநோக்குப் பார்வையும், கொள்கையும் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவிடம் நாட்டைக் கையளிக்க மக்கள் காத்திருப்பதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாகரீகமான ஆட்சியை வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க நாட்டு மக்கள் பல ஆண்டுகளாகக் காத்திருக்கிறார்கள். இன்னும் 48 நாட்களில் அந்த தலைவரை நியமிக்க வாய்ப்பு உருவாகும்.

அனுரவை அந்த இடத்தில் அமர்த்த மக்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். எனவும் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அனுரகுமார திஸாநாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை தமது கட்டுப்பணத்தை செலுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# அரகலய போராட்டக்காரர்களுக்காகவே நாமல்; இளம் தலைமையை ஆதரிக்குமாறு அழைப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட வேட்புமனுக்களை பெற்றுக்கொள்ள அரகலய போராட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அனைவரும் எதிர்பார்க்கும் இளம் தலைவர் ஒருவர் எதிர்காலத்தில் நாட்டை வழிநடத்தத் தயாராக உள்ளார். அவரை ஆதரிக்குமாறு இளைஞர்களிடம் கோரிக்கை விடுக்கிறோம்.

திருடங்கள் அனைவரும் கட்சியில் இருந்து சென்றுவிட்டதுடன், கட்சியும் தூய்மையாகிவிட்டது. எம்மோடு இணைந்துக்கொள்ளுமாறு இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். என்றார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்சவை அக்கட்சி அறிவித்துள்ளது. விரைவில் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை நாமல் ராஜபக்ச செலுத்த உள்ளார்.

இதேவேளை, சர்வமத வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் தமது பிரசார நடவடிக்கைகளை 16ஆம் திகதி முதல் நாமல் ராஜபக்ச ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரியவருகிறது.



## தேர்தல் நெருங்கிவிட்டது:

# தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

சுப்ரமணியம் நிஷாந்தன்

இலங்கைத் தீவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகப்பூர்வமாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவித்திருந்தது.

எதிர்வரும் 14ஆம் திகதிவரை வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தை செலுத்த முடியும். 15ஆம் திகதி காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தலுக்கான நாட்கள் நெருங்கிவருவதால் தென்னிலங்கையில் பெரும் அரசியல் அதிர்வலைகள் உருவாகியுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடந்த இரண்டு வருடங்களாக ஆதரவளித்து ஆளுங்கட்சியாகவும் செயல்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அக்கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் முடிவை இன்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

ஆனால், பொதுஜன பெரமுனவில் சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என அனைவரும் சுயாதீன வேட்பாளராக போட்டியிட உள்ளதாக கூறும் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, பொது ஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள சிலரை இணைத்து பரந்தப்பட்ட கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் ரணில் ஈடுபட்டுள்ளதுடன், விரைவில் கூட்டணிக்கான ஒப்பந்தங்களையும் கைச்சாத்திட உள்ளார்.

**வடக்கில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேம சந்திரன் மற்றும் 45 சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.**

அதேபோன்று பொதுஜன பெரமுன எடுத்துள்ள தீர்மானத்தின் பிரகாரம் வர்த்தகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேராவை வேட்பாளராக களமிறக்க உத்தேசித்துள்ளது. பிரதமர் வேட்பாளராக நாமல் ராஜபக்ச களமிறக்கப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸாநாயக்க என மூன்று பிரதான வேட்பாளர்கள் தெற்கில் தேர்தலில் களங்கண்டுள்ள சூழலில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு தொடர்பிலான மக்களின் எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்திக்கான ஆதரவை அறிவித்துவிட்டது. என்றாலும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அக்கட்சியின் உயர்பீடம் தாருசலாமில் கூடி உத்தியோகப்பூர்வமான அறிவிப்பை வெளியிட உள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எதிர்வரும் 5ஆம் திகதி தமது இறுதி தீர்மானத்தை அறிவிக்க உள்ளதாக அக்கட்சியின் தலைவர் ரிசாத் பதியூதீன் தெரிவித்துள்ளார். கடந்தகாலத்தில் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயல்பட்ட ஏ.எச்.எம்.அதாவுல்லா ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சி தமது ஆதரவு யாருக்கென முடிவெடுக்க எதிர்வரும் 10,11ஆம் திகதிகளில் கூட உள்ளது.



## தேர்தல் நெருங்கிவிட்டது:

# தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

வடக்கில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற 1உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் 45 சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழத் தேசிய மக்கள் முன்னணி எவருக்கும் ஆதரவு இல்லை என அறிவித்துள்ளதுடன், வடக்கு, கிழக்கு மக்கள் தேர்தலை புறக்கணிக்க வேண்டுமெனவும் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, மலையகத்தை பொறுத்தமட்டில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சஜித் பிரேமதாசவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றையும் கைச்சாத்திட்டுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் உயர்பீடம் கூடி மேற்கொள்ளப்படும் உடன்படிக்கை தொடர்பில் கலந்துரையாடல் நடத்த உள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவும் உள்ளது.

மலையகத்தின் மற்றுமொரு பிரதான கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. என்றாலும், அதன் உயர்பீடம் அடுத்தவாரம் கூடி உத்தியோகப்பூர்வ தீர்மானத்தை வெளியிட உள்ளது.

எவ்வாறாயினும் இம்முறை வரலாறு காணாத வகையில் விஜேதாச ராஜபக்ச, சரத் பொன்சேகா, திலித் ஜயவீர என பிரபல்யமான வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை எந்தவொரு வேட்பாளராலும் பெற முடியாதென கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

வெரிடேர்ச் ரிசர்ஸ் நிறுவனம் அண்மையில் நடத்தியுள்ள கருத்துக்கணிப்பில் சஜித் மற்றும் அனுரவுக்கு சம அளவான ஆதரவு மக்கள் மத்தியில் இருப்பதாக கூறியுள்ளது. ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவு குறைவாகவே இருப்பதாகவும் குறித்த கருத்துக் கணிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எந்த பின்புலத்தில் அடுத்த இரண்டு வாரங்கள் இலங்கை அரசியலில் தீர்மானமிக்க மற்றும் அரசியல் புரட்சிகள் இடம்பெற போகும் வாரங்களாக இருக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியிருந்தாலும் வரலாற்றில் இதற்கு முன்பிருந்தது போன்று ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடைபெறும் என்ற நம்பிக்கை இன்னமும் மக்கள் மத்தியில் எழவில்லை.

அதற்கு பிரதான காரணம் அரசியலமைப்பை கரைத்துக் குடித்தவராக உள்ள ரணில் விக்ரமவிங்க எந்த நேரத்தில் எதை செய்வார் என அவருக்கு அருகில் உள்ளவர்களால்கூட அனுமானிக்க முடியாது.

பொலிஸ்மா அதிபரின் நியமனம் தவறானதென உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்மானம் தவறானதென வெளியாகியுள்ள அரசாங்கத்தின் அறிவிப்பானது, நாட்டின் நீதித்துறைக்கு விடுக்கப்பட்டுள்ள பாரயி சவாலாகும்.

கடந்த காலத்தில் ஜனநாயகம், நீதித்துறையின் சுயாதீனம் பற்றி பேசிய ரணில் விக்ரமசிங்க இன்று அவரது அதிகாரத்முக்கான நீதித்துறையின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தியுள்ளார். இந்த காரணிகள்தான் தேர்தல் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மையை மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.





# சம்பந்தருக்குப் பிறகு?

நிலாந்தன்

சம்பந்தர் எதை விட்டுச் சென்றிருக்கிறாரோ அங்கிருந்துதான் அடுத்த கட்டம் தொடங்கும்.சம்பந்தர் எதை விட்டுச் சென்றிருக்கிறார்?

சம்பந்தர் சிதறிப்போன;தன் பலத்தைத் தானே உணராத ஒரு தமிழ்ச் சமூகத்தை விட்டுச் சென்றிருக்கிறார்.

சம்பந்தரின் வழி தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுத் தந்திருக்கிறது என்பதனை இரண்டு தளங்களில் ஆராயலாம்.முதலில் அனைத்துலக அளவில். இரண்டாவதாக உள்நாட்டுக்குள்.

அனைத்துலக அளவில் சம்பந்தர் தமிழ்மக்களின் மெய்யான பலம் எது என்பதைக் கண்டுபிடித்திருக்கவில்லை.தமிழ் மக்களின் துயரங்களுக்கெல்லாம் எது காரணமோ அதுதான் தமிழ் மக்களின் மெய்யான பலமும். அதுதான் தமிழ் மக்களின் புவிசார் அமைவிடம்.அந்த அமைவிடம் காரணமாகத்தான் இனப்பிரச்சினை பிராந்தியமயயப்பட்டது.பின்னர் பூகோளமயப்பட்டது.அந்த அமைவிடம் காரணமாகத்தான் திம்புவிலிருந்து ஒஸ்லோ வரையிலும் பேச்சு வார்த்தைகள் நடந்தன.அந்த அமைவிடம் காரணமாகத்தான் ஈழத்தமிழர்கள் பேரரசுகளின் இழுவிசைகளுக்குள் சிக்கிக் கிழிபடும் மக்களாக மாறியிருக்கிறார்கள்.எனவே எது ஈழத் தமிழர்களின் துயரங்களுக்கெல்லாம் ஊற்றுமூலமாக இருக்கின்றதோ அதையே வெற்றிக்குரிய அடிப்படையாக மாற்றுவதில் சம்பந்தர் வெற்றி பெறவில்லை. அவர் ஈழத் தமிழ் அரசியலை பெருமளவுக்கு சர்வதேச மயநீக்கம் செய்வதிலும் பிராந்திய மயநீக்கம் செய்வதிலும் ஆர்வமாகக் காணப்பட்டார்.

இந்தியாவிடம் போனால் சிங்களமக்கள் கோபிப்பார்கள் என்று கருதி இந்தியாவின் அழைப்பை நிராகரித்தார்.அதுபோலவே ஐநாவில் பரிகார நீதியை கேட்க அவர் விரும்பவில்லை.அதாவது இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை.அவர் கேட்கவில்லை.மாறாக நிலை மாறு கால நீதியைத்தான் சம்பந்தர் ஆதரித்தார்.அதற்குரிய ஐநாவின் தீர்மானத்தில் அவர் பங்காளியாகவும் இருந்தார். ஆனால் 6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையை செய்தோம் அதில் தோல்வி அடைந்து விட்டோம் என்று சுமந்திரன் 2021ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கூறினார். எனவே பரிகார நீதியும் இல்லை;நிலைமாறுகால நீதியும் இல்லை.இப்பொழுது ஐநாவில் ஒரு பலவீனமான சான்றுகளைச் சேகரிக்கும் அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இதுதவிர புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களால் இயன்றதைச் செய்து இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள். குறிப்பாக கனடாவில் குறிப்பிட்ட செல்லக்கூடிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.ஆனால் அவற்றை எல்லாம் அடுத்தடுத்த கட்டத்துக்கு வளர்த்துச்செல்லத் தேவையான ஒரு அரசியல் தலைமைத்துவத்தை தாயகத்தில் இருந்து சம்மந்தர் வழங்கத் தவறினார்.அதனால் அவர் இனப்பிரச்சினையை உள்நாட்டுக்குள் சுருக்க விரும்பிய சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்புக்குத் துணைபோனார் என்பதுதான் சரி.அதாவது சர்வதேச அளவில் சம்பந்தர் தமிழ் மக்களின் அரசியலை குறிப்பிடத்தக்க அளவுக்கு தோற்கடித்து விட்டார். இனப்பிரச்சனை எனப்படுவது சாராம்சத்தில் ஒரு அனைத்துலகப் பிரச்சினைதான். அதற்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு.உள்நாட்டுத் தீர்வு கிடையாது. எனவே இனப்பிரச்சினையை அதன் சர்வதேச, பிராந்தியப் பரிமாணங்களில் இருந்து வெட்டி எடுப்பது என்பது தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்குச் சமம்.சம்பந்தர் அதைத்தான் செய்தார்.



உள்நாட்டில் அவர் என்ன செய்தார்? யாழ்ப்பாணத்தில் அவருடைய இறுதி நிகழ்வு அதற்குச் சான்று.நூற்றுக்கணக்கானவர்கள்தான் அதில் பங்குபற்றினார்கள். அவருடைய கட்சி அவரை ஒரு முதுபெரும் தலைவர் என்று அழைக்கின்றது.ஆனால் ஒரு முதுபெரும் தலைவரின் பூதவுடல் எடுத்துவரப்பட்ட வழிநெடுக மக்கள் காத்திருந்து மலர் தூவவில்லை. அதுமட்டுமில்லை, அவருடைய கட்சித் தொண்டர்கள்கூட ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தவில்லை. அதைவிட முக்கியமாக, சம்பந்தரின் பூத உடல் அடுத்த நாள் விமானத்தில் எடுத்துச் செல்லப்படுவதற்கு இடைப்பட்ட இரவில் தந்தை செல்வா கலையரங்கில் ஓர் அறையில் விடாது சுற்றும் விசிறிகளின் கீழே அனாதையாக வைக்கப்பட்டிருந்தது என்ற செய்தி. அது மிகத் தோல்விகரமானது.சில கட்சி உறுப்பினர்கள் அந்த அறைக்கு வெளியே நின்று இருக்கலாம். ஆனால் ஒரு முதுபெரும் தலைவரின் உடல் ஓர் இரவு முழுவதும் அனாதையாக விடப்பட்டிருந்தமை என்பது சம்பந்தரின் அரசியல் தோல்வியை காட்டுகின்றது.



# சம்பந்தருக்குப் பிறகு?

பொதுவாக ஊரில் ஒரு கிராமவாசி இறந்தால், இரவில் அந்த உடலைத் தனியே விட மாட்டார்கள்.அந்த உடலுக்கு அருகே யாராவது உறங்குவார்கள்.ஒரு குத்துவிளக்கு அல்லது மெழுகுதிரி கால்மாட்டில் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும்.யாராவது தேவாரம் பாடுவார்கள் அல்லது ஜெபம் பண்ணுவார்கள்.இடைக்கிடை பெண்கள் ஒப்பாரி வைப்பார்கள்.ஆனால் சம்பந்தருக்கு தந்தை செல்வா கலையரங்கில் இவை எவையும் இருக்கவில்லை. சம்பந்தரின் தோல்வியை மதிப்பிட அது ஒன்றே போதும்.


நவீன தமிழ் அரசியலில் ஆகக்கூடிய ஆசனங்களைப் பெற்ற ஒரு கூட்டணி அவருடைய கையில் கொடுக்கப்பட்டிருந்தது. 22 ஆசனங்கள்.ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் அந்த ஆசனங்களின் தொகை குறைந்து இப்பொழுது மொத்தம் 13 ஆசனங்கள்.அவைகூட சம்பந்தரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவில்லை. முதலில் ஆயுத மோதல்கள் முடிந்த கையோடு சம்பந்தர் கூட்டமைப்பைப் புலி நீக்கம் செய்தார்.அதன்பின் படிப்படியாக சர்வதேச நீக்கம், பிராந்திய நீக்கம் செய்தார்.கஜேந்திரகுமார் அணி வெளியேறத்தக்க சூழ்நிலைகளை ஏற்படுத்தினார். அடுத்த கட்டமாக ஆயுதப் போராட்ட மரபில் வந்த பங்காளிக் கட்சிகள் விலகிப் போகக்கூடிய நிலைமைகளை அவருடைய பட்டத்து இளவரசர் ஏற்படுத்தினார்.முடிவில் தமிழரசுக் கட்சி மட்டும் மிஞ்சியது. இப்பொழுது அதுவும் இரண்டாக உடைந்து நீதிமன்றத்தில் நிற்கின்றது. அதுமட்டுமல்ல,அவருடைய காலத்தில் கிழக்கில் வடக்கை எதிர்த்துக்கொண்டு தெற்குடன் கைகோர்க்கும் ஒரு கட்சி மேலிருந்து விட்டது. மேலும் கடந்த ஜனவரி மாதம் நடந்த கட்சித் தலைவருக்கான தேர்தலின்போது யாருக்கு செயலாளர் பதவி கொடுப்பது என்ற விவாதங்களில் திருகோண மலையா? மட்டக்களப்பா? எது உண்மையாகக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவது? என்ற ஒரு விவாதமும் எழுந்தது.அதாவது சம்பந்தரின் காலத்தில் கிழக்கில் உப பிரதேசவாதம் ஒன்றும் உற்பத்தி செய்யப்பட்டது.ஆயின்,சம்பந்தர் தமிழரசியலை எங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறார்? இந்த தோல்வி எங்கிருந்து வந்தது? சம்பந்தரின் அரசியல் வழியின் விளைவு அது.சிங்கள மக்களைப் பயமுறுத்தககூடாது என்று அவர் உறுதியாக நம்பினார்.ஆனால் தமிழ் மக்களின் பயங்களை ; கூட்டுக் காயங்களை; கூட்டுத் துக்கத்தை கூட்டு மனவடுக்களை அவர் பொருட்படுத்தவில்லை.ஆயுத மோதலுக்கு பின்னரான ஒரு சமூகத்தில் கூட்டுக் காயங்களுக்கும் கூட்டுத் துக்கத்துக்கும் கூட்டச் சிகிச்சையாக அமையவில்லை ஒரு அரசியலை; பண்புரு மாற்ற அரசியலை முன்னெடுத்திருக்க வேண்டிய ஒரு தலைவர் அவர்.ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.செய்யத் தேவையான அரசியல் உள்ளடக்கம் அவரிடம் இருக்கவில்லை. 2009 மே மாதம் தோற்கடிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் ஒரு விளைவுதான்.அது மூல காரணம் அல்ல.மூல காரணம் இன ஒடுக்குமுறைதான்.அதாவது இலங்கைத்தீவின் இனப்பல்வகைமையை ஏற்றுக் கொள்ளாமை.யுத்த வெற்றிகளின் மூலம் மூலகாரணம் மேலும் வீங்கித் தடித்தது.அது யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற விரும்பவில்லை.மாற்றவும் முடியாது.ஏனென்றால் அது ஓர் இனப்படுகொலை.

போரில் வெற்றி பெற்ற ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை அடிப்படையாக வைத்து ஒரு கட்சியைக் கட்டி எழுப்பினார்கள்.அதன்மூலம் யுத்த வெற்றி வாதத்துக்கு தலைமை தாங்கினார்கள்.யுத்த வெற்றி வாதம் எனப்படுவது நாட்டைத் தொடர்ந்தும் பிளவுண்ட நிலையிலே பேணுவதுதான்.வென்றவர்களும் தோற்றவர்களுமாக நாடு தொடர்ந்து பிளவுண்டிருக்கும்.இவ்வாறு யுத்த வெற்றிவாதிகள் நாட்டைப் பிளவுண்ட நிலையில் பேணும்பொழுது தோற்கடிக்கப்பட்ட தரப்பின் தலைவராகிய சம்மந்தரோ பிளவுபடாத இலங்கைக்குள்;பிரிக்கப்பட முடியாத இலங்கைக்குள் என்று மந்திரம்போல சொல்லிக் கொண்டு,சிங்கள மக்களின் பயங்களைப் போக்குகிறோம் என்று புறப்பட்டு,இறுதியிலும் இறுதியாக யுத்த வெற்றிவாதிகளால் தோற்கடிக்கப்பட்டார். யுத்தவெற்றி வாதம் எனப்படுவது, சிங்கள பௌத்த இனவாதத்தின் 2009க்கு பின்னரான அப்டேட்டட் வேர்சன்தான்.யுத்தவெற்றி வாதமானது தொடர்ந்து ஒடுக்கு முறைகளையும் ஆக்கிரமிப்பையும் முன்னெடுத்துக் கொண்டிருக்க, அதாவது நாட்டைப் பிளவுண்ட நிலையிலே தொடர்ந்தும் பேண, சம்பந்தாரோ நேசக்கரம் நீட்டிக் கொண்டிருந்தார்.முடிவில் யுத்த வெற்றி வாதம் சம்பந்தரின் வழியைத் தோற்கடித்தது.அவருடைய விசுவாசத்துக்கு பரிசாக எதிர்க்கட்சித் தலைவரின் மாளிகையை இறக்கும்வரை அவருக்கு வழங்கியது.

இப்படித்தான் சம்பந்தர் தோற்கடிக்கப்பட்டார். தென்னிலங்கையோடு தன்னை சுதாகரித்துக் கொள்வதற்காக அவர் வகுத்த வழியின் விளைவாக கூட்டமைப்பு உடைந்தது.முடிவில் அவருடைய தாய்க்கட்சியும் உடைந்து விட்டது.சம்பந்தர் தோற்றுப் போனார்.தோல்வியுற்ற ஒரு தலைவராகத்தான் அவர் இறந்து போயிருக்கிறார். அவருடைய உடல் யாழ்ப்பாணத்தில் தனித்து விடப்பட்டிருந்த அந்த இரவிலிருந்து எதிர்காலத் தலைவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். சம்பந்தர் தமிழ் மக்களைச் சிதறடித்து விட்டார்.தமிழ் மக்களின் அடிப்படைப் பலங்களைப் பொருத்தமான விதங்களில் கையாளத் தவறி, தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தியிருக்கிறார். முடிவில் தானும் தனிமைப்பட்டுப் போனார்.எனவே சம்மந்தருக்கு பின்னரான தமிழ் அரசியல் என்பது, சம்பந்தர் சிதறடித்தவற்றை சேர்த்துக் கட்டுவதுதான். சம்பந்தர் தமிழ் மக்களின் எந்தெந்த பலங்களைச் சிதறடித்தாரோ, அவற்றை எல்லாம் மீண்டும் ஒன்றிணைப்பதுதான். எந்தெந்த கட்சிகளை சிதறடித்தாரோ, அவற்றை எல்லாம் ஒன்றாக்குவதுதான்.சம்பந்தருக்கு பின்னரான தமிழ் அரசியல் என்பது ஒன்று திரட்டும் அரசியலாக இருந்தால்தான் அது அதன் கடந்த 15 ஆண்டு கால தோல்வியின் தடத்திலிருந்து வெளியே வரலாம்.

இங்கேதான் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு கால முக்கியத்துவம் பெறுகின்றது.இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடந்தால்,அதில் தமிழ் மக்களுக்கு ஒரே ஒரு தீர்க்கதரிசனமான தெரிவுதான் உண்டு.ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது.ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் தமிழ் மக்களை ஒன்றாக்குவது.சம்பந்தரின் வழியிலிருந்து விலகி வருவதென்றால் அதைவிட வேறு வழி இல்லை. சிதறடிக்கப்பட்டவற்றை ஒன்று சேர்ப்பது.



# தேர்தலும் ரணிலும்

வீரகத்தி தனபாலசிங்கம்

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று கடந்த ஞாயிறோடு இரு வருடங்கள் நிறைவடைகின்றன. ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு இளம் நாடாளுமன்ற உறுப்பினராக கம்பஹா மாவட்டத்தின் பியகம தொகுதியில் இருந்து தெரிவாகி சரியாக 45 வருடங்கள் நிறைவடைந்த தினத்திலேயே அவர் தன்னிடமிருந்து கால்நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக நழுவிக்கொண்டிருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அடைந்தார். அது தற்செயலானதாக இருந்தாலும் கவனத்தை ஈர்த்த ஒரு அம்சம்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் நீண்டகால எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்ததை விக்கிரமசிங்க நிச்சயமாக ஒரு பெருமையாக கருதியிருக்கமாட்டார். அவரைப் போன்று அந்த கட்சியின் தலைவர் பதவியை வேறு எந்த அரசியல்வாதியும் நீண்டகாலம் வகித்ததும் இல்லை.

சுமார் 40 சதவீதமாக இருந்த கட்சியின் வாக்கு வங்கி விக்கிரசிங்கவின் சுமார் மூன்று தசாப்த கால தலைமைத்துவத்துக்கு பிறகு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு சதவீதமாக குறைவடைந்தது. ஐ.தே.கவில் இருந்து நாடாளுமன்றத்துக்கு ஒரு உறுப்பினர் கூட தெரிவாகாத பரிதாப நிலலையை நாமெல்லோரும் கண்டோம். அந்த வரலாற்றுத் தோல்விக்குப் பிறகு ஐ.தே.கவை கலைத்துவிடலாமா என்று விக்கிரமசிங்க சிந்தித்ததாக நவீன் திசாநாயக்க ஒரு தடவை கூறியது நன்றாக நினைவிருக்கிறது.

நாடளாவிய ரீதியில் கட்சி பெற்ற மொத்த வாக்குகளின் அடிப்படையில் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பயன்படுத்தி அதுவும் பத்து மாதங்கள் கழித்து மீண்டும் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்த விக்கிரமசிங்க அதே நாடாளுமன்றம் ஒரு வருடத்திற்கு பிறகு தன்னை ஜனாதிபதியாக தெரிவுசெய்யும் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்.

> **அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தங்களது வாய்ப்புகள் குறித்து அவர்கள் கரிசனை கொண்டிருப்பதே அந்த தடுமாற்றத்துக்குக் காரணம். விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றிபெற்றாலும் கூட மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும் அவரது கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு தங்களது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ளமுடியுமா என்ற சந்தேகம் அவர்களுக்கு இருக்கிறது.**

அதேவேளை, அவரைத் தவிர வேறு எவரும் தனது கட்சியின் ஒற்றைப் நாடாளுமன்ற உறுப்பினராக சபையில் இருந்துகொண்டு ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கவும் முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி கோட்டாபயவின் அழைப்பை ஏற்று விக்கிரமசிங்கவுக்கு முன்னதாக பிரதமராக பதவியேற்றிருந்தாலும் கூட, பிறகு அவரை நாடாளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு ராஜபக்ஷர்கள் தங்கள் ஆதரவை வழங்கியிருப்பார்கள் என்று கூறமுடியாது.

ராஜபக்ஷர்களை விக்கிரமசிங்க பாதுகாக்கிறாரோ இல்லையோ, அவரின் தலைமையில் ஒரு அரசாங்கம் தங்களை வேட்டையாடாது என்ற நம்பிக்கை அவர்களுக்கு நிச்சயமாக இருக்கிறது. தற்போது கூட எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரிக்கும் தெரிவை இன்னமும் ராஜபக்ஷர்கள் கைவிடவில்லை. அது தங்களுக்குப் பாதுகாப்பான தெரிவு என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

எந்தத் தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்நோக்கத் தயார் என்றும் தங்களது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே மீண்டும் வெற்றிபெறும் என்றும் என்னதான் ராஜபக்ஷர்கள் மார்தட்டிப் பேசினாலும், 'அறகலய' கிளர்ச்சிக்குப் பின்னரான அரசியல் நிலைவரத்தில் மக்கள் மத்தியில் தங்களுக்கு இருக்கும் ஆதரவை மதிப்பிட முடியாத அளவுக்கு அவர்கள் அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் இல்லை. மக்கள் மத்தியில் ஒரு விதமான உளவியல் குழப்பத்தை ஏற்படுத்துவதே ராஜபக்ஷர்கள் அவ்வாறு பேசுவதன் நோக்கமாக இருக்கலாம்.

தங்கள் கட்சியினால் தேர்தல்களில் வெற்றிபெற முடியும் என்றால் எதற்காக அவர்கள் ஒரு ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில்



# தேர்தலும் ரணிலும்

களமிறக்க விருப்பமில்லாமல் தனவந்தர் தம்மிக்க பெரேரா போன்றவர்களை முன்னிறுத்துகிறார்கள்? மக்கள் கிளர்ச்சிக்குப் பிறகு தங்களது வாக்கு வங்கி எத்தகைய நிலையில் இருக்கிறது என்று பபீட்சித்துப் பார்ப்பதற்கு ராஜபக்ஷர்களுக்கு தங்கள் குடும்ப உறுப்பினரைத் தவிர, வேறு ஒருவர் தேவைப்படுகிறார்.

பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தும் என்று அதன் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் கூறியிருந்தார். தற்போது பொதுவேட்பாளர் என்பதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விட்டது. விக்கிரமசிங்கவும் தன்னை பொது வேட்பாளர் என்கிறார்? தமிழர் தரப்பிலும் ஒரு பொது வேட்பாளர் குறித்து நீண்ட நாட்களாக பேசப்பட்டுவருகிறது. தங்களின் ஆதரவு இல்லாமல் எந்த வேட்பாளரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமுடியாது என்றும் ராஜபக்ஷர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ராஜபக்ஷர்களை பொறுத்தவரை ஒன்றில் அவர்கள் ஆட்சிக்கு மீண்டும் வரவேண்டும் அல்லது கடந்த கால தவறுகளுக்காக தங்களைப் பொறுப்புக்கூற வைப்பதில் அக்கறை காட்டாதவர்கள் ஆட்சிக்கு வருவதை உறுதிசெய்ய வேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டே அவர்களின் வியூகங்கள் அமைகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் தங்களது கட்சியின் வேட்பாளரை நிறுத்தப் போவதாக ராஜபக்ஷர்கள் அச்சுறுத்துவது தங்களது ஆதரவை நாடுகின்ற தரப்பிடமிருந்து தங்களின் நலன்களை உறுதிப்படுத்தக்கூடியதாக சாத்தியமானளவுக்கு அரசியல் பேரத்தைப் பேசுவதற்காகவேயாகும். இது விடயத்தில் ஜனாதிபதி விக்கிரமசிங்கவை தங்களுக்கு சாதகமான முறையில் மடக்குவது மிகவும் கஷ்டம் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றால் தங்களுக்கு ஒரளவு அனுகூலமான சூழ்நிலை உருவாகலாம் என்று நினைத்த ராஜபக்ஷர்கள் அது தொடர்பில் ஜனாதிபதி மீது பிரயோகித்த நெருக்குதல்கள் பயனளிக்கவில்லை. விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவரது கட்சியின் தற்போதைய மிகவும் பலவீனமான நிலையில் நாடாளுமன்றத் தேர்தலை பற்றி நினைத்துப் பார்க்கவே முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் மாத்திரமே ஐ.தே.க. மீட்சிபெறுவது குறித்து நம்பிக்கைகொள்ள முடியும். தனது கட்சியை மீளக்கட்டியெழுப்புவதில் உள்ள பிரச்சினைகளை விக்கிரமசிங்க நன்கு அறிவார். அதனால் தான் அவர் ஜனாதிபதித் தேர்தலில் தனது கட்சியுடன் தன்னை அடையாளப்படுத்தாமல் சுயாதீனமான பொதுவேட்பாளராக போட்டியிடுவது குறித்து பேசுகிறார்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் கட்சித்தலைவர் ஒருவர் தனது கட்சியிடமிருந்து தன்னை தூரவிலக்கிக்கொண்டு மற்றைய கட்சிகளைச் சேர்ந்தவர்களுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவதற்கு திட்டம் தீட்டுவது இதுவே முதற்தடவையாகும். அத்தகைய கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியை ராஜபக்ஷர்களின் கட்சியைச் சேர்ந்த சிலரைப் பயன்படுத்தி கடந்த வருடமே விக்கிரமசிங்க தொடங்கிய போதிலும் இது வரையில் அதில் குறிப்பிடத்தக்க வெற்றியைக் காணமுடியவில்லை. ஆனால், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சில அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக ஒரிரு பொதுக் கூட்டங்களை அண்மைக் காலத்தில் ஏற்பாடு செய்தார்கள். விக்கிரமசிங்கவை தவிர வேறு எந்த தலைவராலும் இலங்கையை அதன் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கமுடியாது என்றும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியுடன் பொதுஜன பெரமுனவில் எவரும் இல்லை என்றும் அவர்கள் பகிரங்கமாக பேசுகிறார்கள்.

இந்த மாத இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டவுடன் அதில் போட்டியிடப்போகும் தனது தீர்மானத்தை விக்கிரமசிங்க





# தேர்தலும் ரணிலும்

உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்றும் அதையடுத்து அவரை ஆதரிக்கப் போகும் 'மெகா கூட்டணி ' உருவெடுக்கும் என்று கூறப்படுகிறது. பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அரசியல்வாதிகள் அந்தக் கூட்டணியில் கணிசமான எண்ணிக்கையில் சேருவார்களாக இருந்தால் ராஜபக்ஷர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவர். விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குவதற்கு அவருடன் பேரம் பேசமுடியாத நிலை ராஜபக்ஷர்களுக்கு ஏற்படலாம்.

தேர்தல் அறிவிப்பு வெளியானதும் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தன்னுடன் வந்து இணைவார்கள் என்றும் ஜனாதிபதி எதிர்பார்க்கிறார். ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது இருக்கும் சில தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் தேர்தலில் எத்தகைய முடிவை எடுப்பது என்று தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தங்களது வாய்ப்புகள் குறித்து அவர்கள் கரிசனை கொண்டிருப்பதே அந்த தடுமாற்றத்துக்குக் காரணம். விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற்றாலும் கூட மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும் அவரது கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு தங்களது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ளமுடியுமா என்ற சந்தேகம் அவர்களுக்கு இருக்கிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்ற பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மாத்திரமே தனது சாதனையாக விக்கிரமசிங்க முன்வைக்கிறார். கடந்த இரு வருடங்களில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட சில சட்டங்கள் காரணமாக ஒரு லிபரல் ஜனநாயகவாதி என்று தனக்கு இருந்த படிமத்தையும் அவர் இழந்துவிட்டார்.

அவரைத் தவிர வேறு எவராவது ஜனாதிபதியாக வந்தால் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தடம்புரண்டு மீண்டும் பாரிய நெருக்கடி தோன்றும் என்று அவரைச் சார்ந்தவர்கள் ஒரு 'மிரட்டல் பிரசாரத்தை' முன்னெடுக்கிறார்கள். இலங்கையின் வேறு எந்த அரசியல் தலைவருக்கும் இல்லாத சர்வதேச மதிப்பு விக்கிரமசிங்கவுக்கு இருக்கிறது என்றும் அவர்கள் அயராது கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் கூறுகின்றவற்றுக்கு புறம்பாக பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் இருக்கின்றன. இரு வருடங்களுக்கு முன்னரான நிலைவரத்தில் இருந்து வேறுபட்டதாக 'வழமை நிலையின் சாயல்' ஒன்று காணப்படுகின்ற போதிலும், அதிகப் பெரும்பான்மையான சாதாரண மக்களைப் பொறுத்தவரை வாழ்க்கைச் செலவு சமாளிக்க முடியாததாகவே தொடர்ந்தும் இருக்கிறது.

இத்தகைய பின்புலத்தில் சில தினங்களுக்கு முன்னர் இலங்கையின் முன்னணி அரசியல் ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட



'ஜனாதிபதித் தேர்தலுக்கு முந்திய இலங்கை அரசியல் நிச்சயமற்ற நிலை அல்லது குழப்பநிலை' என்ற தலைப்பில் நீண்டதொரு கட்டுரையில் கூறியிருக்கும் முக்கியமான ஒரு கருத்தை இங்கு நினைவுபடுத்துவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். அக்டோபருக்கு பிறகு இலங்கையை ஆட்சி செய்யப்போவது யார்?' என்ற கேள்வி மூன்று காரணங்களுக்காக மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

முதலாவதாக, பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தின் ஆட்சிக்குப் பதிலாக கூடுதலான அளவுக்கு ஜனநாயக பீதியானதும் பொறுப்புக்கூறக்கூடியதுமான அரசாங்கம் ஒன்றை வேண்டிநின்ற 2022 அறகலய மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு இடம்பெறப்போகும் முதல் தேர்தல் இதுவாகும்.

இரண்டாவதாக, அதிகப்பெரும்பான்மையான மக்கள் மீது சுமத்தப்படுகின்ற முன்னென்றுமில்லாத வகையிலான துன்பங்களைப் பற்றிய பிரக்ஞை எதுவுமின்றி சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடனான பொருளாதார மறுசீரமைப்புச் செயற்திட்டத்தை கடந்த வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்திவரும் தற்போதைய அரசாங்கம் தொடர்பில் தங்கள் தீர்ப்பை இலங்கை வாக்காளர்கள் கூறுவதற்கு தேர்தல் வாய்ப்பளிக்கிறது.

மூன்றாவதாக, நாட்டின் புதிய ஆட்சியாளர்களாக மாற்று அரசியல் தலைமைத்துவம் ஒன்று மேலெழுவதற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு புதிய கட்டத்தை இலங்கை அரசியல் எட்டியிருக்கிறதா என்பதை இந்த தேர்தலின் முடிவுகள் வெளிக்காட்டும்.



# 1700 ரூபா கிடைக்குமா?

# ஏமாறும் தொழிலாளர்கள்

**செ.திவாகரன், நானுஓயா**

எமது நாட்டின் முதுகெலும்பு தேயிலை தோட்டங்களில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் எனலாம். நாட்டின் பொருளாதார, அபிவிருத்திக்கு இரண்டு நூற்றாண்டுகளாக பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர் என்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். தற்போது ஏற்பட்டிருக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடியும் விலைவாசி உயர்வும் என ஏற்கனவே பல பிரச்சனைகளில் திண்டாடி வரும் மலையக மக்களை இன்னும் விளிம்புக்குத் தள்ளியிருக்கின்றன. ஆனால் இந்த மக்களின் வாழ்க்கை இன்னும் அபிவிருத்தியடையாமல் பின்தங்கிய நிலையில் உள்ளது. அரசியல், சமூக, பொருளாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து வகையிலும் நசுக்கப்பட்ட மக்களாகவே காணப்படுகின்றனர்.


மலையகத்தில் அதிகமான இடங்களிலும் தேயிலைத் தோட்டங்களும் நிறைந்த பகுதியாக காணப்படுகின்றன. பார்ப்பதற்கு மிக அழகாகக் காட்சியளிக்கும் ஆனால் இந்தப் பகுதியில் வசிக்கும் தொழிலாளர்களின் நிலை அவ்வளவு ரசிக்கத்தக்கதாக இல்லை. தொழில் புரியும் தொழிலாளர்கள் மிகக் குறைவான கூலி பெறும் நிலை. இதனை பெற்றுக்கொள்ள பல வழிகளில் போராடி வருகிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின்? குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் ரூ. 1700 ஆக அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த மே தினத்தில் அறிவித்திருந்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்த மே தின கொண்டாட்ட நிகழ்வுகள் கொட்டகலை பிரதேச சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் விசேட விருந்தினராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்து கொண்டபோதே இதனை தெரிவித்தார். அதனை தொடர்ந்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தி மே மாதம் (21) 2024 அன்று அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. குறித்த அதிவிசேட அறிவித்தலுக்கமைய, தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நாட் கூலி ரூ. 1,350 ஆகவும் உற்பத்தித்திறன் அடிப்படையில் நாளாந்த விசேட கொடுப்பனவு ரூ. 350 ஆகவும் என, மொத்த நாளாந்த சம்பளம் ரூ. 1,700 அதிகரிக்கப்பட்டது.

'ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது' என்பது போல் முதலில் குறித்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்துவதைத் தடுத்து உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்தது. குறித்த சம்பள அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானிக்கு எதிராக சில பெருந்தோட்ட கம்பனிகள் உயர் நீதிமன்றில் சமர்ப்பித்த மனுவின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் குறித்த உத்தரவை வழங்கியது. ஆனால் கடந்த காலங்களில் தோட்டத்தில் தொழில் புரியும் தொழிலாளர்கள் சமூகம் வழங்கிய பங்களிப்பை குறைவாக மதிப்பிட்டு தொழில் அமைச்சின் செயலாளர் வெளியிட்டிருந்த அதிவிசேட வர்த்தமானி இரத்து செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்கள் முக்கிய பிரதிநிதிகளாக பாராளுமன்றத்திற்கும் மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளுக்கும் பல உறுப்பினர்கள் அனுப்பப்பட்டும் இன்றைய காலம் வரையில் இச்சமூகத்தின் பல தேவைகள் பின்தங்கியயே உள்ளது. இம்மக்கள் அரசியல் ரீதியாக பேரினவாதிகளாலும் தமது சமூக அரசியல்வாதிகளாலும் ஏமாற்றப்பட்டே வருவது ஒரு தொடர்கதையாகவே உள்ளது .

பாடு படும் தொழிலாளர்களை இவ்வாறான ஏமாற்று வார்த்தைகளை சில மேடைகளில் இம்மக்களிடம் தெரிவித்து வாக்குகளை கொள்ளை அடிப்பதில் அனைவரும் அதிக திறமைகளைக் காட்டி வருகின்றனர். இந்நிலையில் தற்போது கிடைக்கும் வருமானம் தங்கள் பிள்ளைகளின் படிப்பு செலவுகளுக்கு போதுமானதாக இல்லை. இதனால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலையில் உள்ளது. எனவே சம்பள பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டுமாயின் அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே அது சாத்தியமாகும். அரசியல் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து போன மலையக மக்கள் எதிர்காலத்தில் எவ்வாறு இருக்கப் போகிறார்கள் என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.



# மலையகத்தின் 200 வருடங்களும் எதிர்காலமும் (2023 – 2028)

தேசபந்து. இரா.சிவலிங்கம் சமாதான நீதிவான்


மலையகத்தின் வரலாறு 200 வருடங்களை கடந்து விட்டது. இந்த 200 வருடங்களில் மலையக மக்கள் சாதித்த விடயங்கள் சொல்லில் அடங்கா. 200 வருடங்களாக லயத்து வாழ்க்கையை அனுபவித்து வருவதே ஒரு சவாலான விடயம்தான். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வித பயிற்சிகளும் இன்றி தோட்டத்தில் பெயர் பதிந்தவுடனேயே வேலை செய்வது என்பது ஒரு அதிசயமாக இருக்கின்றது. உலகத்தில் உள்ள எல்லா தொழில்களுக்கும் ஒரு பயிற்சி வழங்கப்படுவதை காணலாம் ஆனால் கொழுந்து பறிக்கவும், தேயிலை தொழிற்சாலையில் வேலை செய்வதற்கும், தேயிலை மலையில் வேலை செய்வதற்கும் எந்தவிதமான பயிற்சிகளும் வழங்கப்படாமலே வேலை வழங்கப்படுவதைக் காணலாம். தோட்டத் தொழிலாளர்கள் செய்கின்ற மிகக் கடுமையான வேலைகள் பல இருக்கின்றன. கவ்வாத்து வெட்டுதல். கிருமி நாசினி தெளித்தல். கொழுந்து பறித்தல். தேயிலை மலைகளை சுத்தம் செய்தல். உரம் போடுதல். கான் வெட்டுதல். முள்ளுக் குத்துதல். தேயிலைப் பிடுங்குதல். கல்லுடைத்தல். கான் வெட்டுதல். குழி குத்துதல். பாசான் துடைத்தல். புல் வெட்டுதல். புல் பிடுங்குதல். கட்டடம் கட்டுதல். அருகு எடுத்தல். நிலத்தை மட்டப்படுத்தல், சாக்கு வேலை போன்ற பல்வேறு வகையான வேலைகளை ஆண்கள் செய்கின்றார்கள். பெண்கள் கொழுந்துப் பறித்தல், தேயிலை தொழிற்சாலையில் வேலை செய்தல், பில் பிடுங்குதல் போன்ற வேலைகளைச் செய்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய வேலைகளை செய்யும் தொழிலாளர்களுக்கு எவ்விதமான தொழில் பாதுகாப்பும் இல்லை. தொழில் காப்புறுதி கிடையாது. வேலைத்தளங்களில் எவ்விதமான பாதுகாப்பும் இல்லை. அட்டைக் கடி, குழவி கொட்டுதல், எரிப்பூச்சு கடித்தல், பாம்புகள் தொல்லை. சிறுத்தைகளின் நடமாட்டம், தகாத கால நிலை, கடுமையான வெயில், மழை, பனி மிக உயரமான மலைகள், அதிகமான படிக்கட்டுகள் (200 - 300), தோட்டத்தில் உள்ள கரடு முரடான பாதைகள், ஆபத்தான பாதைகள், உணவு அருந்தவோ, இயற்கையான கடமைகளை செய்வதற்கோ எவ்விதமான வசதிகளோ தேயிலை மலைகளில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சகல விடயங்களும் இயற்கையிலும், வெளி இடங்களிலும் தான். நோய்வாய்பட்ட ஒரு தொழிலாளிக்கும் இதே கதிதான். துப்பரவு செய்யப்படாத தேயிலை மலைகள், தேயிலை மலைகள் காடுகளாக ஆக்கப்படுகின்றமை. தோட்ட நிறுவாகம் தேயிலை மலைகளையும், பாதைகளையும், தோட்டத் தொழிலாளர்களைம் பாதுகாப்பதில் அல்லது பராமரிப்பதில் காட்டும் அசமந்தப் போக்குகள்.

மேற்கூறிய அனைத்து விடயங்களையும் தாங்கிக் கொண்டு நான்கு பரம்பரையாகவும், இரண்டு நூற்றாண்டுகளாக வாழும் மக்களின் மன தைரியம் என்பது பாராட்ட வேண்டியது. தன்னைப் பற்றியும், தன்னுடைய நிலைப் பற்றியும், தன்னுடைய குடும்பத்தின், பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியும் இருபது தசாப்தங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்க்கையில் எதிர்காலத்திலாவது ஒரு விடிவு வர வேண்டும். இதற்காக துரித வேலைத்திட்டங்களை மலையகம் முழுவதும் முன்னெடுக்க வேண்டும். துரித 5 ஆண்டு திட்டங்களை பல மட்டங்களிலும், பல்வேறு துறைகளிலும் முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக மலையகத்தின் கல்வி நிலையில் அதிக கவனம் எடுக்க வேண்டும். கல்வி தான் ஒரு சமூகத்தின் முதலீடு என்பதை உணர்ந்து செய்ற்பட வேண்டும். மலையகத்திலுள்ள பாடசாலைகள் அர்ப்பணிப்போடு செயற்பட முயற்சிக்க வேண்டும். இதற்கான வேலைத்திட்டங்களை மலைகப் பாடசாலைகளை தயாரிக்க வேண்டும். ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு செய்றபட தொடங்க வேண்டும். மலையகத்திற்கு 30 வருடங்களின் பின்னர் கடைத்த கல்வி வாய்ப்பை மிக உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மலையகத்தை நோக்கி கல்வி நிறுவனங்கள் விஸ் தரிக்கப்பட வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்கள். உயர்தர கல்வி டிப்ளோமா வழங்கும் நிறுவனங்கள். ஆங்கில மற்றும் கணித, விஞ்ஞான, தொழில் நுட்ப, கனணி போன்ற துறைகளுக்கு மேலும் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். கற்ற சமூகத்திற்குத்தான் மதிப்பும், மரியாதையும், கௌரவமும் அதிகம் என்பதை மலையகமும் எதிர்காலத்தில் உணர்ந்து செயற்பட வேண்டும்.

வருடத்திற்கு 500 மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புகின்ற வேலைத் திட்டங்களை மீண்டும் முன்னெடுக்க வேண்டும். மாணவர்களை உயர்தரத்தில் கணித, விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளுக்கு அனுப்ப வேண்டும். இன்னும் 25 வருடங்களில் இந்த உலகத்திற்கு ஏற்றது போல் இன்றைய கல்வி கற்கும் முறைகளை மாற்ற வேண்டும். எதிர்கால வேலை உலகிற்கு மலையகம் இப்போதே தயாராக வேண்டும். அல்லது தயார்ப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால கல்வியின் தூர நோக்கு இல்லாமல் தொடர்ந்து கற்றுக் கொண்டிருப்பது நேரத்தையும், காலத்தையும், பணத்தையும் வீணடிக்கும் செலாகும் என்பதை இன்றையப் பெற்றோர்கள் உணர்ந்து செய்ற்பட வேண்டும். தொடர்ந்து இனி வரும் காலங்களிலும் லயத்து வாழ்க்கையை மட்டும் நம்பி வாழ முடியாது. தோட்டத்திலுள்ள வேலைகளை மட்டும் நம்பி வாழ முடியாது. மாற்றுத் தொழில்களுக்கு வழிகாட்ட வேண்டும். தொழில் நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு ஆர்வம் காட்ட வேண்டும். மாணவர்களுக்கு வழி காட்ட வேண்டும். எதிர்கால மலையகம் எப்படி இருக்கப் போகின்றது என்பதை தீர்மானிப்பது அரசியல் வாதிகளோ, தொழிற் சங்கங்களோ, அரசியல் கட்சிகளோ, அரசார்பற்ற நிறுவனங்களோ இல்லை. மலையகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு தனிமனிதனும் சிந்தித்து தன்னுடைய வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் மலையக மக்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும், துரோகமான செயற்பாடுகளும், இம் மக்கள் வஞ்சிக்கப்பட்ட, புறம் தள்ளப்பட்ட, புறக்கனிக்கப்பட்ட, ஏமாற்றப்பட்ட,



# மலையகத்தின் 200 வருடங்களும் எதிர்காலமும் (2023 – 2028)

விடயங்கள் பல இருக்கின்றன. குறிப்பாக 1948 ஆம் ஆண்டுகளில் இலங்கை சுதந்திரம் அடைந்தாலும், மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. பாராளுமன்ற பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டது. சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மலையக மக்கள் இந்தியாவுக்கு நாடு கடத்தப் பட்டமை, இலங்கையில் ஏற்பட்ட சிறி குழப்த்தில் மலையகத் தமிழர்கள் பாதிக்கப்பட்டமை, 1983 ஆண்டு வன் செயலில் அதிக மக்கள் பாதிக்கப்பட்டமை. 1989 ஆம் ஆண்டு காலத்தில் ஏற்பட்டப் இனக் கலவரங்கள், தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினைகளில் தோட்ட மக்கள் பாதிக்கப்பட்டமை. இன்று வரையும் சகல மக்களுக்கும் கானி உரிமையோ, உழைப்புக்கு ஏற்ற வேதனமோ வழங்கப்படுவதில்லை. தோட்டங்கள் இன்று வரையும் தேசிய நீரோட்டத்தில் சுகாதாரம், சௌக்கியம், பிரதேச சபைகள் இணைத்துக் கொள்ளப்பட வில்லை.

குறிப்பாக 200 வருடங்கள்ாக பல போராட்டங்களையும், ேலை நிறுத்தங்களையும், சத்தியா கிரகங்களையும், பாதை யாத்திரைகளையும் செய்தே பல விடயங்களில் ஒரு சில வெற்றிகளைப் பெற்றுக் கொண்ட னர். விசேடமாக பிரஜா உரிமையைப் பெற்றுக் கொண்டமை, அரச தொழில் வாய்ப்புக்களைப் ( ஆசிரியர் தொழில், பொலிஸ் உத்தியோகம், ஏனையத் துறைகள்) பெற்றுக்கொண்டமை, இன்று 13000 ஆசிரியர்கள் மலையகத்தில் ந்த சமூகம் முன்னேற்றமடையத் தொடங்கி விட்டது என்று அர்த்தமஇருக்கின்றார்கள். பொலிஸ் உத்தியோகஸ்த்தர்களாக பலர் வேலை செய்கின்றார்கள். ஒரு சில அரசாங்கத் தொழில்களில் இன்று இணைந்து வேலை செய்கின்றார்கள். பிரதேச சபை, மாகாண சபை, பாராளுமன்றத்தில் பலர் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்கால மலையகம் எப்படி இருக்க வேண்டும் என ஒவ்வொரு மலையகத்தவரும் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் தன்னை சுயமாக முன்னேற்றிக் கொள்ள வேண்டும். சுய முன்னேற்றம் ஒரு சமூகத்திற்கு வந்து விட்டாலே அர்த்தம் கொள்ளப்படும்.

100 சதவீதமாக இருந்த மலையகப் பகுதிகளை தன்னுடைய உடல் உழைப்பாலும். உள ரீதியான உழைப்பாலும் இன்று சொர்க்கா புரியாக மாற்றிய மலையக மக்களின் வாழ்க்கையானது இன்றும் வறுமை, கடன் தொல்லை, பசி நோய், பினி, துன்பம் நிறைந்ததாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். மலையக மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் வர வேண்டும் என்றால். மதுபாவனையைக் குறைக்க வேண்டும். நுண் கடன்கள் பெறுவதை குறைக்க வேண்டும். அதிக வட்டிக்கு கடன் பெறுவதையும், ஆடம்பர செலவுகளையும் குறைக்க வேண்டும். கேபில் டிவி பாவனையைக் குறைக்க வேண்டும். வாழ்க்கையைத் திட்டமிட வேண்டும். பிள்ளைகளின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சுய தொழில் ஈடுபட வேண்டும். மறக்கறித் தோட்டங்களை செய்யத் தொடங்க வேண்டும். ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபட வேண்டும். இன்னும் அதிகமான நேரம் உழைப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

2028 ஆம் ஆண்டு அதாவது இன்னும் 5 வருடங்களில் ஒரு மாதிரி திட்டத்தை புத்தி ஜீவிகளும், தொழிற் சங்கங்களும், அரசியல் கட்சிகளும், அரசியல் வாதிகளும், சமூக ஆர்வலர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து ஒரு முன் மொழிவைத் தயாரித்து மலையக மக்களுக்கான ஆலோசனை வழி காட்டலை செய்யத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு தோட்டங்களிலும் கல்வி அபிவிருத்திக் குழுக்களை உருவாக்க வேண்டும். இளைஞ்சரகளுக்கு தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வை கொடுக்க வேண்டும். ஏன். வி. க்யூ பாட நெறியை தொடர்வதற்கு வழிகாட்ட வேண்டும். புதிய சுய தொழில் வாய்ப்புக்களை அறிமுகப்படுத்த வேண்டும். பெண்களின் முன்னேற்றத்திற்காக பெண்கள் குழுக்களை ஸ்தீரப்படுத்த வேண்டும். பெண்கள் கழகங்களை தோட்டங்கள் தோறும் உருவாக்க வேண்டும். கலை கலாசாரம், விளையாட்டுத் துறை களை ஊக்குவிக்க வேண்டும். பெற்றோரின் பென்சன் பணத்தில் ஆட்டோ வாங்குவதையும், வீடுகளைத் திருத்துவதிலும், கலியாணம், சடங்கு,பிறந்த நாள் விழாக்களை க் கொண்டாடுவதையும் குறைக்க வேண்டும்.

தோட்டங்கள் தோறும் பட்டதாரிகள் உருவாக வேண்டும். தோட்டப்புற மாணவர்களும் வக்கீல்களாக, வைத்தியர்களாக, பொறியலாளர்களாக, விரிவுரையாளர்களாக, அரச உயர் உத்தியோககங்களைப் பெறுபவர்களாக மலயகச் சமூகம் மாற வேண்டும். மலையகப் பிரதேசங்களில் உள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்து அறிக்கைப்படுத்த வேண்டும். மலையக எழுச்சிக்கான மகாநாடுகளையும், கலந்துரையாடல்களையும், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்ய வேண்டும். புலம் பெயர் மலையகத்தைச் சார்ந்தவர்களின் உதவிகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். மலையக அபிவிருத்தி குழு ஒன்றை மாவட்ட ரீதியாக உருவாக்க வேண்டும். மலையக அபிவிருத்தி குழுவில் பல்வேறு தரப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். தோட்டங்கள் தோறும் ஒவ்வொரு துறைக்குமான அபிவிருத்திக் குழுக்களை தயார்படுத்த வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளை தோட்டத் தொழிலாளர்களாகவே இருக்க வேண்டும் என்பது இல்லை. அவர்களும் படிக்க வேண்டும். உயர் கல்விப் பெற வேண்டும். நல்ல உத்தியோகம் பார்க்க வேண்டும். கை நிறைய சம்பாதிக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் என்ற நிலைப்பாட்டை னிவரும் இளைஞர் சமுதாயமாவது மாற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். தங்கி வாழும் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும். லயத்து வாழ்க்கை முறையை ஒழிக்க வேண்டும். பததாம் திகதி சம்பளத்தையும், தீபாவளி அட்வான்சையும் எதிர்பார்க்கும் நிலை மாற வேண்டும். வெளி மாவட்டங்களுக்கு வீட்டு வேலைகளுக்கு மலையகத்தவர்கள்தான் என்ற நிலை மாற வேண்டும்.

தேசியப் பரீட்சைகளான தரம் 5 புலமைப் பரிசில், க.பொ.த சாதாரணத் தரம், க.பொ.த உயர் தரம் போனறப் பரீட்சைகளில் மலையக மாணவர்கள் அதி கூடிய பெறுபேறுகளைப் பெற வேண்டும். பல்கலைக்கழகத்திற்கு செல்லுகின்ற மாணவர்களின் தொகை அளவு ரீதியாகவும், தர ரீதியாகவும் அதிகரிக்க வேண்டும். தேயிலைத் தோட்டங்களின் செழிப்பு பொல் மலையக மக்களின் வாழ்க்கையும் எதிர்காலததில் செழிக்க வேண்டும்.



# தற்கொலை பிரச்சனைகளுக்கான தீர்வாகுமா?

மோகன சாந்தி

‘ஏன் வாழ வேண்டும்? செத்துடலாம் போல இருக்கு.’ இந்த எண்ணம் வாழ்நாளில் ஒரு முறையேனும் ஒரு மனிதனுக்கு வராமல் இருந்திருக்காது. ஆம். வாழ்க்கையில் ஏற்படும் ஏதோ ஒரு இழப்பு மற்றும் உளபீதியான பாதிப்பின் போது தற்கொலை எண்ணம் தோன்றாத மனிதர்கள் இங்கு குறைவு. ஆனால் தன்னை மாய்த்துக் கொள்ளவே தைரியம் வரும் போது வாழ்வதற்கு அதைவிட குறைவான தைரியம் போதுமானது என உணருபவன் மட்டுமே அந்த தற்கொலை எண்ணத்தை கடந்து வருகிறான்.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான பல அழகிய தருணங்கள் நிறைந்தது தான் வாழ்க்கை. அன்பு, பாசம், ஏமாற்றம், தோல்வி, சந்தோஷம், வெறுப்பு, துக்கம், கோபம், தாபம் என எல்லா வகையான வாழ்வின் அற்புதமான தருணங்களை கடந்தே ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வை வாழ்ந்து வருகிறான்.

வாழ்வு ஒருநாளும் ஒரு மனிதனுக்கு முழுமையான சந்தோஷத்தையும் முழுமையான துக்கத்தையும் எழுதிக் கொடுத்து விடுவதில்லை. எல்லா வகையான தருணங்களையும் மனிதன் அவன் வாழ்வில் எதிர்கொள்ள வேண்டும். அடுத்த நிமிடம் கூட நிச்சயமற்ற மனித வாழ்வில் ஒரு நொடி கூட நமது மனநிலையையும் எண்ணங்களையும் சாதகமாகவோ பாதகமாகவோ மாற்றிவிடும். அப்படி இருக்கும்போது எந்த ஒரு பிரச்சனைக்கும் தற்கொலை தீர்வாகாது.

அண்மைக்காலங்களில் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக வலைத்தளங்கள் என எங்கு பார்த்தாலும் தற்கொலை சார்ந்த செய்திகள் பரவலாக பகிரப்படுவதை



காணலாம். மன பலவீனமானவர்கள் மட்டுமல்ல சில சந்தர்ப்பத்தில் மனபலம் கொண்டவர்கள் கூட தற்கொலை முடிவை எடுத்து விடுகின்றனர்.

அன்பானவர்களின் இறப்பு, இழப்பு, தோல்வி, மனப்பதட்டம் மன உளைச்சல் போன்ற மன அழுத்த காரணங்களே 90% தற்கொலை முடிவுகளுக்கு காரணமாகியுள்ள நிலையில் உயிரியல், உளவியல், சமூக காரணிகளாலேயே தற்கொலை எண்ணம் தூண்டப்படுகிறது. தேவையற்ற கவலை உணர்வு, குற்ற உணர்வு, அளவுக்கதிகமான கோபம், ஏமாற்றம், விரக்தி, தூக்கமின்மை, சந்தேகம், கருத்து வேறுபாடு, வேலைப்பளு, நம்பிக்கையின்மை, மனச்சோர்வு எரிச்சல், உடல் மற்றும் அழகு சார் விடயங்களிளான தாழ்வு மனநிலை, பபீட்சையில் தோல்வி, நிதி நெருக்கடி கடன் சுமை, பிழையான தீர்மானங்களினால் ஏற்பட்ட விளைவு, நெருங்கிய உறவின் பிரிவு, தம்முடைய எதிர்கால வாழ்க்கை பற்றிய தேவையற்ற அச்சம், சமூகத்தில் எமது பிம்பம் தொடர்பான பயம் என ஆழ்மனதை ஆழமாக பாதிக்கும் காரணிகள் உச்சம் தொடும்போது மனிதனானவன் தன் உயிரை மாய்த்துக்கொள்ள தீர்மானிக்கிறான்.

எவ்வாறாயினும் தற்கொலை செய்வதற்கு ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் கூட ஒரு மனிதனின் இழப்பு என்பது எந்த ஒரு விதத்திலுமே ஈடு செய்ய முடியாததாகும்.

பொதுவாக தற்கொலை சம்பவமொன்று இடம்பெறும் போது தற்கொலை செய்த நபருக்கு ‘பக்குவம் இல்லை. அறிவில்லை. முட்டாள்தனமான தீர்மானத்தை எடுத்திருக்கிறார்’ என தனிப்பட்ட நபரையே குற்றம் சாட்டுகிறோம். ஆனால் தற்கொலை எண்ணம் ஏற்படுபவரை அந் நிலைபாட்டில் இருந்தான



# தற்கொலை பிரச்சனைகளுக்கான தீர்வாகுமா?

மனநிலையை மாற்ற வேண்டிய கடப்பாடு எம் எல்லோருக்குமுண்டு.

வாழ்க்கையில் எல்லா விடயத்திலும் நம்பிக்கையை இழந்த நிலையில் 'இனி இந்த வாழ்க்கையை வாழ்வதற்கான தகுதி எனக்கு இல்லை' என்ற உச்சகட்ட மனவிரக்தி நிலையே தற்கொலைக்கான இறுதி வெளிப்பாடு. ஆய்வாளர்களின் தற்கொலை செய்தவர்களின் பின்னணி ஆய்வின்படி, பொதுவாக தற்கொலை செய்தவர்கள் அவர்களின் தற்கொலை எண்ணம் தொடர்பான சிந்தனைகளை அவர்களை சார்ந்தவர்களிடம் பல தடவைகள் வெளிப்படுத்தி உள்ளதாகவும் தற்கொலை செய்து உயிரை மாய்த்து கொண்டவர்கள் அதற்கு முன்னேயும் பல தடவைகள் தற்கொலை முயற்சி செய்தவர்களாகவும் இருப்பதாக குறிப்பிடுகின்றனர்.

எனவே எவரேனும் ஒருவருக்கு தற்கொலை எண்ணம் தலைதூக்கும் போது அதனை உதாசீனம் செய்துவிடாது அவர்களுக்கு உண்மையிலேயே என்ன பிரச்சனை? அப்பிரச்சினையை அவர்கள் எவ்வாறு சுமூகமாக அணுகலாம். அப்ப பிரச்சினைக்கான தீர்வை எவ்வாறு காணலாம்? அல்லது அப்பிரச்சினையை எவ்வாறு முகம் கொள்ளலாம் என அவர்களுக்கு நம்பிக்கை கொடுத்து அப்பிரச்சினையில் இருந்து அவரை மீட்டெடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

எல்லா வகையான நெருக்கடியான சூழலின் போதும் தற்கொலை எண்ணம் வருவது பொதுவானது. அவ்வாறானவர்கள் ஏனையவருடன் பேசுவது பழகுவது குறைவாக இருக்கும், உணவில் விருப்பமின்மை, பசியின்மை, தனிமையை விரும்புதல், உடை அணிகலன்களை அணிதலில் நாட்டமின்மை, விளையாட்டுகளில் ஆர்வமின்மை, வேலைத்தளங்களில் முறையாக வரவின்மை, தூங்குவது குறைவு,உடல் எடை குறைதல் போன்ற பல வெளிப்பாடுகளை பிரதிபலிப்பதன் மூலம் இவ்வாறானவர்களை அடையாளம் காணலாம்.

எனவே எமது உறவினர்கள், நண்பர்கள், எம்மை சுற்றியுள்ளோர் என எம்மை சார்ந்த யாரேனும் இது போன்ற வெளிப்பாடுகளை காட்டுவார்கள் எனின் அவர்கள் தொடர்பாக கூடிய அவதானிப்பையும் அக்கறையையும் காட்ட வேண்டியது அவர்களை அண்டியுள்ளவர்களின் கடமையாகும்.

போதையில் தன்னிலை மறந்து தற்கொலை செய்பவரானாலும் சரி, ஏதேனும் மனநிலை சார் தாக்கம் காரணமாக தற்கொலை செய்பவரானாலும் சரி, அவர்களுக்கு வாழும் திறன் கலை பற்றிய அறிவை போதிக்க வேண்டும். வாழ்வின் வெற்றி, தோல்வி, ஏமாற்றம், இழப்பு என எந்த ஏற்றத்தாழ்வு நிலை தோன்றினாலும் அதனை கையாள அவர்களை பழக்கப்படுத்தும் போது அவர்களை தற்கொலை எண்ணத்தில் இருந்து வெளிக் கொண்டுவர முடியும்.

அவர்களுக்கு யாருடன் எப்படி பேச வேண்டும்? என்ற சமுதாய அறிவையும் சக மனிதர்களுடன் எவ்வாறு பழக வேண்டும்? எப்படி இணைந்து வாழ வேண்டும்? ஒரு பிரச்சனையை எவ்வாறு அணுக வேண்டும்? எப்படி தீர்வு காண வேண்டும்? தீர்மானம் வெற்றி தோல்வி பெறும்போது வெற்றி, தோல்வியை கையாள்வது எப்படி? தைரியமாக வாழ்வது எப்படி?

சிறிய பிரச்சனையொன்று ஏற்படும் போது அப் பிரச்சனைக்குள்ளேயே மூழ்கி அதையே சிந்தித்து அப்பிரச்சினையிலேயே சிக்கித் தவித்து முடங்கிவிடாமல் அதிலிருந்து வெளி வருவது எப்படி? பிரச்சனையொன்று ஏற்படும் போது அப்பிரச்சினையிலிருந்து வெளிவரக்கூடிய திறனை வளர்ப்பது எப்படி? என உடல், அறிவு, திறன் என்பவற்றில் முன்னேற்றத்தை கொண்டு வருவதன் மூலம் தற்கொலை எண்ணத்தை வெற்றிகரமாக கடந்து வர இயலும்.

எனவே தற்கொலை என்பது தனி நபரை மட்டுமின்றி குடும்பம், நண்பர்கள், உற்றார் உறவினர், ஒரு சமூகம் என எல்லோரையுமே நிலைக்குலைய செய்து விடும். ஒரு தற்கொலை சம்பவத்தால் எல்லோருடைய மனதிலும் ஏற்படக்கூடிய வடுக்கள் காலத்தினால் அழியாதவை. உண்மையிலேயே ஆறறிவு கொண்ட மனிதன் மட்டுமே தற்கொலை பற்றி சிந்திக்கிறான். பெரியவர்கள், சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள், ஏழை, பணக்காரன், திருமணமானவர், திருமணமாகாதவர், படித்தவர், படிக்காதவர் என இந்த தற்கொலை எண்ணம் யாரையும் விட்டு வைத்து விடவில்லை..

எமது வாழ்க்கை தொடர்ந்து இப்படித்தான் இருக்கப் போகிறது என்ற எண்ணம், வாழ்க்கை மாறக்கூடியது என்ற புரிதல் இன்மையே தற்கொலை எண்ணத்திற்கான முக்கியமான காரணமாகும். அவர்களின் மனமுதிர்ச்சி மற்றும் அறிவு மனமுதிர்ச்சியால் மட்டுமே தற்கொலையிலிருந்து விடுபட முடியும். எனவே தற்கொலை எண்ணம் கொண்டவர்களுக்கு சிறப்பான குடும்ப உறவு, நண்பர்கள், உளவியல் நிபுணர்களின் ஆதரவு போன்றவற்றின் மூலம் தற்கொலை எண்ணத்தை மாற்ற முடியும். தற்கொலை என்ற சொல்லை அகராதியில் இருந்து அகற்றுவதற்கு எமது எல்லோருடைய பங்களிப்பும் அவசியமாகும்.



# ஹமாஸ் இஸ்மாயில் ஹனியே படுகொலை:

# மொசாட்டின் பழிக்குப் பழி!

# ஈரானில் வைக்கப்பட்ட இலக்கு!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஈரான் புதிய அதிபர் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக சென்றிருந்த இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

ஈரானில் மெய்ப்பாதுகாவலருடன் அவர் தனது இல்லத்தில் குறிவைக்கப்பட்டதாக ஈரானின் புரட்சிகர காவலர் படை தெரிவித்துள்ளது. ஈரானில் அதிபர் மசூத் பெசெஷ்கியானின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்தார். தற்போது இச்சம்பவத்தின் சூழ்நிலைகளை ஆராய்ந்து வருவதாக ஈரானிய அரசு கூறியுள்ளது.

**ஈரானில் படுகொலையான ஹமாஸ் தலைவர்:**


இஸ்ரேல் – ஹமாஸ் படைகளுக்கு இடையே பல மாதங்களாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் உயிரிழந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை நாற்பது ஆயிரமாக உயர்ந்துள்ளது.

இதுவரை 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ள நிலையில், தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினர் மீதான தாக்குதலை இஸ்ரேல் படைகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக பாலஸ்தீன போராளிகளைக் குறி வைத்து இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஹமாஸ் இயக்கத் தலைவர் இஸ்மாயில் ஹனியே (Hamas' top political leader Ismail Haniyeh) கொல்லப்பட்டார்.

ஈரானின் புதிய அதிபராக தேர்வான மசூத் பெசெஷ்கியன் பதவியேற்பு விழாவில் பங்கேற்க சென்றிருந்தார் இஸ்மாயில் ஹனியே. தெஹ்ரானில் அவர் தங்கியிருந்த வீட்டை குறிவைத்து இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடத்தியது. இதில் ஹனியே மற்றும் அவரது பாதுகாவலர் என 2 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை இந்த தகவலை உறுதிப் படுத்தி உள்ளதாக ஈரான் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது. ஹனியே படுகொலைக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை.



ஆயினும் பாலஸ்தீன போராளிகளைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தும் இஸ்ரேல் படைகளும், உளவு அமைப்பு மொசாட்டும் மிகத் தீவிரமாக வேட்டையாடத் தொடங்கி உள்ளன.

**யாரிந்த இஸ்மாயில் ஹனியே:**

இஸ்மாயில் ஹனியே கடந்த 2017 முதல் ஹமாஸின் தலைவராக இருந்து வருகிறார். தற்போது ஹமாஸின் அரசியல் பணியகத்தின் தலைவராக பணியாற்றி வந்துள்ளார்.

அத்துடன் இஸ்மாயில் ஹனியே ஹமாஸ் போராளிக் குழுவின் நாடு கடத்தப்பட்ட அரசியல் தலைவராக இருந்து வந்தார். சமீபத்திய ஆண்டுகளில் கத்தாரில் தனது பெரும்பாலான நேரத்தை செலவிட்டார்.

தற்போதய போது இஸ்ரேல்-காசா போரில், அவர் போர்நிறுத்த பேச்சு வார்த்தையில் ஒரு பேச்சுவார்த்தையாளராக செயல்பட்டார். அத்துடன் ஹமாஸின் முக்கிய நட்பு நாடான ஈரானுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவரான இஸ்மாயில் ஹனியே ஈரானில் கொல்லப்பட்டமை அரபுலகில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



# ஹமாஸ் இஸ்மாயில் ஹனியே படுகொலை:
# மொசாட்டின் பழிக்குப் பழி! ஈரானில் வைக்கப்பட்ட இலக்கு!!

**மொசாட்டின் பழிதீர்க்கும் படலம்:**

இப் படுகொலைக்கு உடனடியாக யாரும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் சந்தேகம் உடனடியாக இஸ்ரேல் மீது விழுந்ததுள்ளது. ஹனியே மற்றும் ஹமாஸின் பிற தலைவர்களை அக்டோபர் 7 இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பழி தீர்க்கும் வண்ணம் கொல்ல இஸ்ரேல் உறுதியளித்தது.

ஆயினும் இக்கொலை எப்படி நடந்தது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. மேலும் இஸ்ரேல் உடனடியாக கருத்து தெரிவிக்கவில்லை.

ஆனால் அவர்களின் மொசாட் உளவுத்துறை நிறுவனத்தால் நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு அது பெரும்பாலும் உரிமை கோருவதில்லை.

இவ்வருட ஏப்ரலில் ஹனியே கத்தாரில் இருந்தபோது காசா பகுதியில் வான்வழித் தாக்குதலில் ஹனியேவின் மூன்று மகன்களையும் அவரது பேரக்குழந்தைகள் பலரையும் இஸ்ரேல் கொன்றது.

தற்போது லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் இஸ்ரேல் தாக்குதல் நடத்திய சில மணிநேரங்களுக்குப் பிறகு ஒரு உயர்மட்ட ஹிஸ்புல்லா தளபதி கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மொசாட்டின் தப்பாத குறி:**

சமீபத்திய ஆண்டுகளில் ஈரானிலும் பிற இடங்களிலும் பல ஹமாஸ் உயர்மட்ட படுகொலைகளை நடத்திய இஸ்ரேல், இதுவரையில் ஹனியேவின் கொலை குறித்து இதுவரை கருத்து தெரிவிக்கவில்லை.



2004 இல், இஸ்ரேல் காஸாவில் வான்வழித் தாக்குதலை நடத்தி, அப்போது ஹமாஸின் தலைவர் அப்தெல் அஜிஸ் ரந்திசி கொன்றது. அதே ஆண்டு, காசா நகரில் ஹமாஸ் போராளிக் குழுவின் நிறுவனர்களில் ஒருவரான அகமது யாசினையும் படுகொலை செய்தது.

தற்போது ஹனியே படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சில மணிநேரங்களுக்குப் முன்னர், இஸ்ரேலிய படைகள் செவ்வாயன்று லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் வான்வழித் தாக்குதலில் மூத்த ஹெஸ்புல்லா தளபதி ஃபுவாட் ஷுகூரைக் கொன்றதாக 'ஐடிஎஃப்' தெரிவித்துள்ளது.

பழிக்குப் பழியாக கடந்த சனிக்கிழமையன்று இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு கோலன் ஹைட்ஸ் பகுதியில் ஒரு கால்பந்து மைதானத்தைத் தாக்கிய ராக்கெட் தாக்குதலுக்குபொறுப்பான தளபதியைக் குறிவைத்து கொன்றுள்ளது.

மத்திய கிழக்கில் போர்ப் பதட்டங்கள் அதிகரித்துள்ள வேளையில், விரைவில் பிராந்திய மோதலாக ஏற்படுமா என்று பல மேற்குலக நாடுகள் அஞ்சுகின்றன.

குறிப்பாக பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உள்ள தலைவர்களும் அதிகாரிகளும் லெபனான், இஸ்ரேல் மற்றும் ஈரானில் உள்ள பிரதிநிதிகளை அணுகி பரந்த பிராந்தியப் போரைத் தடுக்க முயன்று வருகின்றனர்.



# இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதரவு சஜித்துக்கா?

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் சில கட்சிகள் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற பின்புலத்தில் அந்த விடயத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஊடாக தமிழ் மக்கள் கடந்த ஏழு தசாப்தங்களாக பேசிவரும் பிரச்சினையை தோல்வியில் முடிவடைய செய்யும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தெரிவித்துள்ளார்.

என்றாலும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், டொலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் உட்பட பல முன்னாள் நாடாளுமன்ற, மாகாண உறுப்பினர்களும் வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகின் கூட்டணியும் இணைந்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் செயல்படுகின்றனர்.

இந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக் கட்சி நாட்டம் காட்டவில்லை என்பதுடன், கட்சியில் ஓர், இருவர் மட்டுமே அந்த நிலைப்பாட்டை ஆதரவளிக்கு எண்ணத்தில் இருப்பதாக தெரியவருகிறது.

எதிர்வரும் 10, 11ஆம் திகதிகளில் தமிழரசுக் கட்சியின் அரசியல் உயர்பீடம் கூட உள்ளது. இதன் போது யாருக்கு ஆதரவளிப்பதென தீர்மானிக்கப்பட உள்ளது.

தேசிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடாமையால் அக்கட்சிக்கு ஆதரவளிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி ஏற்கனவே எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரும் தமிழரசுக் கட்சியின் ஆதரவை கோரியுள்ளனர். ஆனால், இன்னமும் இறுதி நிலைப்பாட்டை கட்சி எடுக்கவில்லை.



என்றாலும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி எடுக்க அதிகளவான வாய்ப்புகள் உள்ளதாக கட்சியின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

அவ்வாறான நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி எடுத்தால் அது ரணில் விக்ரமசிங்கவுக்கு பாரிய பாதிப்பை தேர்தலில் ஏற்படுத்தும் என வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் பொது வேட்பாளரின் பின்புலம் தொடர்பில் பல்வேறு கருத்துகள் சமூகத்தில் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடித்து தெற்கின் பிரதான வேட்பாளர் ஒருவரின் நிகழ்ச்சி நிரலின் கீழும் அவரின் வெற்றியை உறுதிப்படுத்தவுமே இத்தகைய நகர்வுகள் இடம்பெறுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள பின்புலத்தில் தமிழரசுக் கட்சியின் ஆதரவு சஜித்துக்கு கிடைத்தால் அது பிரதான வேட்பாளர்களில் ஒருவராக உள்ள ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி வாய்ப்பை கடுமையாக பாதிக்கும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ria
Money Transfer
உலகின் எப்பாகத்திற்கும் பணத்தை அனுப்ப உடன் நாடுங்கள்
Send and receive money worldwide



# மட்டக்களப்பில் செந்தில், வியாழேந்திரனிடம் ஆதரவு கோரிய ஜனாதிபதி!

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சி ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களிடம் நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி வைத்துள்ள எதிர்கால திட்டங்கள் என்ன என்பதை தெளிவூட்டியதுடன், நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைகள் மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் என்னவென்று கேட்டறிந்தார்.

மேலும் இளைஞர்கள் வேலை வாய்ப்பு இன்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். எதிர்காலத்தில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை அதிகரிப்பதாகவும், IMF கடன் மறுசீரமைப்பின் ஊடாக 2035 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட உள்ள வேலைத்திட்டங்கள் குறித்து தெளிவூட்டினார்.

இக்கலந்துரையாடல் நிறைவின் போது இதொகா தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானிடம் கிழக்கிலும் மலையகத்திலும் ஆதரவு கோரினார். மலையகத்தை தாண்டி கிழக்கிலும் மலையக தலைவர் ஒருவரிடம் ஜனாதிபதி ஆதரவு கோரியது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கில் உள்ள மூவின மக்களில், ஒரு சமுதாயத்திற்கும் இன்னுமொரு சமுதாயத்திற்கும் இடையில் கடும் முரண்பாடுகள் இருந்த சூழ்நிலையில், தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட கூடாது என செந்தில் தொண்டமானின் நியமனத்திற்கு எதிராக சிங்கள மக்கள் கடும் எதிர்ப்புடன் கூடிய போராட்டத்தில் ஈடுபட்டனர்.ஆனால் இவ்வொரு வருடத்திற்குள் சிங்கள மக்கள் மனதை வென்று தற்போது சிங்கள மக்களின் பல நிகழ்வுகள் செந்தில் தொண்டமான் தலைமையிலே நடத்தப்பட்டு வருகின்றது.

சிங்கள மக்களை போன்று முஸ்லிம் மக்களும் ஆளுநர் மாற்று இனத்தவர் என ஆரம்பத்தில் தமது அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தி வந்தனர்.முஸ்லிம் மக்களுக்கு தேவையான நியாமாக பெற கூடிய அனைத்து வேலைத் திட்டங்களையும் பாகுபாடு இன்றி ஆளுநர் முன்னெடுத்ததை அடுத்து, கிழக்கு மாகாண வரலாற்றில் முதல் முறையாக காத்தான் குடியில் ஆளுநர் நடத்திய இப்தார் நிகழ்வில் 5000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்துக் கொண்டு இப்தாரை சிறப்பித்து ஆளுநருடன் இணைந்து பயணிப்பதை வெளிப்படுத்தினர்.

அதேபோல கிழக்கு தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படாததால், ஆரம்பத்தில் தமிழ் மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பில்லாத நிலையே காணப்பட்டது. பொங்கல் விழா, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு, உலக தமிழ் கலை கலாச்சார மாநாடு, தமிழர்களுக்கான காணி வழங்கல் ,தமிழில் தேசிய கீதத்தை இசைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியது என தமிழர்களுக்காக மேற்கொண்ட பல வேலைத்திட்டங்கள் தமிழர்கள் மத்தியில் பெரும் ஆதரவை ஏற்படுத்தியது. இவ்வாறு மூவின மக்களையும் சரிசமமாக நடத்தி கிழக்கில் அனைவரும் ஏற்றுக் கொள்ள கூடிய ஒரு தலைவராக ஆளுநர் செந்தில் தொண்டமான் உருவெடுத்துள்ளார்.

மக்கள் மட்டும் இன்றி அரசியல் தலைமைகள் மத்தியிலும் ஆளுநருக்கான ஆதரவு வலுப்பெற்றது. முன்னாள் முதலமைச்சரும், கெபினட் அமைச்சருமான நசீர் அஹமட்க்கும் ஆளுநருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் முறுகல் நிலையின் போது , கிழக்கு மாகாணத்தை பிரதிநித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஆளுநருக்கு ஆதரவாக நின்றது முழு இலங்கையும் அறிந்த விடயமாகும். ஆளுநருக்கு மக்கள் மத்தியில் மட்டுமன்றி அரசியல் மட்டத்திலும் பெரும் வரவேற்பு காணக்கூடியதாக இருந்தது.

ஏனைய ஆளுநர்களை விட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒருபடி மேலாக அனைத்து துறைகளிலும் வேலைத் திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்துள்ளார் என்பதை நன்கு அறிந்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் இந்த அரசாங்கத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு செந்தில் தொண்டமானின் ஆதரவை கோரியுள்ளார் என அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் சமூக வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மலையகத்தை தாண்டி கிழக்கிலும் மலையக தலைவர் ஒருவரிடம் ஜனாதிபதி ஆதரவை கோரிய முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

உதயம் செய்திகள்
பத்திரிகை,
இணையத்தின்

# அறிவித்தல்

ஆக்கப்பூர்வமான உங்கள் எழுத்தாற்றலை
வெளிக் கொணர்வதற்கு அறிய வாய்ப்பு

உங்கள் ஊரில் உள்ள பிரச்சினைகள்,
கட்டுரைகள், சிறுகதைகள்,
கல்வி, கலை, கலாசார, சமூக, பொருளாதார
ஆக்கங்களையும் உங்கள் படைப்புக்களையும்
எமக்கு அனுப்பி வைக்கவும்

info@uthayamnews.com

உதயம் செய்திகள் குழுமம்




ria
Money Transfer
உலகின் எப்பாகத்திற்கும்
பணத்தை அனுப்ப
உடன் நாடுங்கள்
Send and receive money worldwide



# 50 வருட அரசியல் வாழ்வை தமிழர்களுக்காக அர்ப்பணித்தவர்

## விக்கிரமபாகு நினைவேந்தலில் யாழ் மக்கள் புகழாரம்

இலங்கைத்தீவின் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்காக மரணிக்கும் வரை குரல் கொடுத்துவந்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தானவுக்கு யாழ்ப்பாணத்தில் நினைவேந்தல் நடத்தப்பட்டுள்ளது.

நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன, சென்ற மாதம் 25 ஆம் திகதி இயற்கை மரணமடை்தார்.

கொழும்பை மையமாகக் கொண்ட சிங்கள அரசியல் தலைவர் ஒருவருக்காக - வடமாகாணம் யாழ்ப்பாணத்தில் நினைவேந்தல் நடத்தப்பட்டமை இது முதற்தடவை யாகும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில், ஜூலை 27ஆம் திகதி இடம்பெற்ற நினைவேந்தலில் கலந்து கொண்டு கருத்துரைத்த, மூத்த எழுத்தாளரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினருமான மு. ஈழத் தமிழ்மணி, 81ஆவது வயதிலும் விக்ரமபாகு கருணாரத்ன தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவே வாழ்ந்த இடதுசாரித் தலைவர் என எடுத்துரைத்தார்.

தமிழ் மக்களுக்கான உரிமை எந்த காலத்திலும் வழங்கியே ஆக வேண்டும் என்ற அடிப்படை உணர்வு அவரது அடிமனதில் இருந்தது. அதற்காகவே அவர் வாழ்ந்தார்.

அவர் நினைத்திருந்தால் சிங்கள கட்சிகளோடு கூட்டிணைந்து அரசியலில் ஈடுபட்டிருக்கலாம். எனினும் அவர் தனது கொள்கையில் இருந்து மாறவில்லை. சிங்கள மக்கள் விரும்பினால் என்னை ஏற்றுக் கொள்ளட்டும் என்ற கொள்கையுடன் இருந்தார். இடதுசாரி கொள்கையுடன் தொடர்ந்து செயற்பட்டார்.

தமிழர் உரிமைக்காகப் போராடியதன் காரணமாக சிங்கள மக்கள் பலராலும் துரோகி என விமர்சிக்கப்பட்ட விக்ரமபாகு கருணாரத்ன, சரியான அரசியல் பார்வை கொண்ட தலைவராக செயற்பட்டதாகவும் ஈத்தமிழ்மணி புகழராம் சூட்டினார்.

விக்கிரமபாகுவின் ஐம்பது வருட அரசியல் வாழ்க்கை தமிழ் மக்களுக்காகவே அமைந்திருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதே வேளை தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சென்ற 4 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் விக்ரமபாகு கருணாரத்னவின் நினைவேந்தல் நிகழ்வை நடத்தியிருந்தது.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும், வடமாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சருமான பொன்னுத்துரை ஐங்கரநேசன், தமிழ் மக்களுக்கு ஓரளவு அதிகாரம் வழங்குவதாக நம்பப்பட்ட மாகாண சபையை பாதுகாப்பதற்காக சிங்கள மக்கள் மத்தியில் அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதன் காரணமாக நவ சமசமாஜக் கட்சியின் செயற்பாட்டாளர்களை மக்கள் விடுதலை முன்னணி கொலை செய்த வரலாற்றை ஞாபகப்படுத்தினார்.

13ஆவது திருத்தச் சட்டம் எங்களுக்கான தீர்வு அல்ல, தொடக்கப் புள்ளியும் அல்ல நீண்ட தமிழ்த் தேசிய விடுதலை போராட்டத்தில் மூச்சு விடுவதற்கான ஒரு இடமாகவே நாம் நோக்குகின்றோம். 13 ஆவது திருத்தத்தின்போது, இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு தென்னிலங்கையில் அதற்கு எதிர்ப்பு வெளியானபோது, இதனை அவர் ஆதரித்தார். அதனை ஆதரித்தமைக்காகவே அன்றைய ஜேவிபியினால் இவரது தோழர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். என்றும் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை 1988 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன படுகாயமடைந்திருந்தார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக தனது அரசியல் வாழ்நாள் முழுவதும் போராடிய கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னவிற்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஜேவிபி தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திஸாநாயக்கவும் இந் நிகழ்வுக்கு வருகைத் தந்திருந்தார்.

இதே வேளை, வவுனியாவில் உள்ள சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள் அண்மையில் விக்ரமபாகு கருணாரத்னவிற்கு நினைவேந்தல் நிகழ்வை வவுனியாவில் நடத்தியதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# கல்வி புரட்சி மூலமே மலையகத்தில் நிலையானதொரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம்

## பாரத் அருள்சாமி

கல்வி புரட்சிமூலமே மலையகத்தில் நிலையானதொரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம் என உறுதியாக நம்புகின்றோம். எனவே, மலையக கல்வி அபிவிருத்திக்கு நாம் என்றும் துணை நிற்போம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி, மஹியாவ கலைமகள் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு உட்கட்டமைப்பு கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு,

மஹியாவ கலைமகள் வித்தியாலயமானது வரலாற்று சிறப்புமிக்க பாடசாலையாகும். கண்டி நகர எல்லைக்குள் உள்ள மூன்று தமிழ்ப் பாடசாலைகளில் கலைமகள் வித்தியாலயத்துக்கென தனி சிறப்பு உள்ளது.

இக்கல்லூரியின் அதிபர், எனது ஆசான் திரு சபாபதி அவர்கள், பலருக்கு கல்வி கண் திறந்தவர். மிகவும் சிறப்பாக கல்வி அமுதூட்டி பல நற்பிரஜைகளை சமூகமயப்படுத்தியவர், எனது வாழ்விலும் அவர் மறக்க முடியாத நபர். இன்று நான் சிறந்த நிலையில் இருப்பதற்கு அவர் கற்றுதந்த கணித பாடமும் பெரிதும் கைகொடுத்தது. அவரின் வழிகாட்டதால்தான் பரிட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெறமுடிந்தது.

மிகவும் தலைசிறந்த ஆசானான அவர், ஒரு அதிபராக சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி, இப்பாடசாலையில் பல மாற்றங்களை ஏற்படுத்திவருகின்றார். பாடசாலையின் சாதாரணதரம் மற்றும் உயர்தரப்பபீட்சை பெறுபேறுகள் திருப்தியடையக்கூடிய வகையில் உள்ளது. பாடசாலை நிர்வாகமும் சிறப்பாக நடைபெறுகின்றது. கலை நிகழ்வுகள், வலய, மாகாண மற்றும் தேசிய மட்ட போட்டிகளிலும் பங்கேற்று திறமையை மாணவர்கள் வெளிப்படுத்திவருகின்றனர்.

அதேபோல இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் சிறந்த முன்னுதாரணத்தை சமூகத்துக்கு வழங்கிவருகின்றனர். இத்திட்டத்துக்குரிய நிதி உதவியை அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனையின் பிரகாரம் நாம் வழங்கி இருந்தாலும் பழைய மாணவர்களின் அர்ப்பணிப்பதால் அந்த நிதிக்கும் மேலதிகமாக நிதி திரட்டி சேவைகளை செய்து, திட்டத்தை பூரணப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு நன்றி கலந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுடன் மலையகத்தில் கல்வித்துறையை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றோம். இந்திய அரசும் எமக்குரிய உதவிகளை வழங்கிவருகின்றது. அறிவெழுச்சி வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது. அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், சுசில் பிரேமஜயந்த ஆகியோர் தலைமையில் இதற்கான நிகழ்வு இடம்பெறும். இலங்கைக்கான இந்திய தூதுவரும் இந்நிகழ்வில் பங்கேற்பார்.

மத்திய மாகாணசபை ஊடாக மலையக கல்வி மேம்பாட்டுக்கு எனது தந்தை அமரர் அருள்சாமி அவர்கள் வழங்கிய சேவைகளையும் மறந்துவிடமுடியாது. கல்வி புரட்சிமூலமே மலையகத்தில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தலாம் என நம்புகின்றோம். அதற்காகவே கல்விக்கு முக்கியத்துவமும், முன்னுரிமையும் வழங்கிவருகின்றோம். மஹியாவ கலைமகள் கல்லூரிக்கு மேலும் நிதி ஒதுக்கீடுகளை வழங்கவும் எதிர்பார்க்கின்றோம். – என்றார்.

oria

அனுசரணையுடன்

# அகவை 3 இல் உதயம் செய்திகள்

3rd ANNIVERSARY

uthayam news உதயம் செய்திகள்

தமிழர்களின் புது யுகம்

பேராதரவை தொடர்ந்தும்
வழங்கி வரும் வாசகர்கள்,
எழுத்தாளர்கள்,
நலன் விரும்பிகள்
உங்களோடு கைகோர்த்துச்
செல்லும் பயணம்
இதே மகிழ்ச்சியுடன் நீளும்....

**அனைவருக்கும்**
**என்றென்றும் நன்றிகள்....**